# பலாங்கொட நகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 05 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மாாச் 30 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நொவம்பர் 04 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய பலாங்கொட நகர சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பலாங்கொட நகர சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 571 மற்றும் 572 என்பவற்றின் பிரகாரம் காலங் கடந்த வைப்புகளை அரசிறையிலிடுவதற்கு கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளபோதும், அதனைக் கருத்திற் கொள்ளாது 59 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் ரூபா 12,008,147 க்கான வைப்புகள் பொது ஒதுக்கத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) வாடி வீட்டின் உணவு, குடிவகைகள் சம்பந்தமாக ரூபா 12,065,286 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகைப் பெறுவனவு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருந்தது.

(இ) வாடி வீட்டு மாதாந்த வருவாய் கூற்றுக்கமைய 2012 ஆம் ஆண்டிற்கான மொத்த விற்பனைப் பெறமதி ரூபா 14,496,353 ஆகக் கட்டுப்பாட்டுள்ளதுடன் இறுதி நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் மொத்த விற்பனைப் பெறுமதி ரூபா 12,847,240 ஆக ரூபா 1,649,113 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) காணி கட்டிடங்கள், இயந்திர சாதனங்களது ஐந்தொகைப் பெறுமதி ரூபா 217,773,086 ஆகும். எனினும், நிலையான சொத்துப் பேரேட்டுக்கமைய அது ரூபா 202,690,305 ஆகும்.

(உ) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் பெற வேண்டிய வாடி வீட்டுக் கட்டணமாக கணக்கில் காட்டப்பட்ட தொகை ரூபா 79,713 ஆகும். இது ஏற்படக் காரணம் அல்லது அதனைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் தொடர்பாகக் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளைச் சமர்ப்பிக்காமை

2012 ஆம் ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களுடன் ரூபா 264,739,412 பெறுமதியான 63 நாட் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டபோதும், குறித்த நாட்குறிப்புகள் சரியானவையா என்பதைப் பரீசீலிப்பதற்கான மூல ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 2,295,804 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 10,717,758 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிர்வாகம் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்ட வருவாய் | உள்ளபடியான வருவாய் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) | தீர்வையும் வரியும் | 6,500 | 5,598 | 1,683 |
| (ii) | குத்தகை வாடகை | 17,107 | 15,783 | 1,652 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,712 | 1,712 | - |
| (iii) | பிற வருவாய் | 26,018 | 21,179 | 6,264 |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபை தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 1,123,480 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,200,000 |

### 2.2.3 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரக் கட்டணம்

சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் 2006 முதல் 2012 வரை 3 தொலைபேசி பரிவர்த்தனைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. எனினும், உப விதிகளை அமைத்து அனுமதிப் பத்திரத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

## 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1984 நவம்பர் 20 ஆந் திகதிய 19 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களிலும் அபிவிருத்தி மன்றங்களிலும் வருவாயைச் சேகரித்தல் மற்றும் வருவாய் நிலுவையை அறவிடுதல் எனும் சுற்றறிக்கை மற்றும் 1993 ஒக்டோபர் 19 ஆந் திகதிய உள்ளூராட்சி ஆணையாளர்

(சபரகமுவ) வெளியிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களில் தீர்வையும் வரியும் மற்றும் ஏக்கர் வரி என்பவற்றைச் சேகரிப்பது தொடர்பாக அலுவலக நேரத்திற்கு அப்பால் அலுவலக உத்தியோகத்தர்களை தரகு அடிப்படையில் பணியமர்த்தல் எனும் சுற்றறிக்கை அறிவுறுத்துரைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின்போது வருவாய் பரிசோதகருக்கு 4 சந்தர்ப்பங்களில் ரூபா 67,772 கூட்டுத்தொகையாக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஜனவரி 28 ஆந் திகதிய வருடாந்த மாநாட்டில் தலைவரது உத்தியோக பூர்வ வாகனத்திற்கு மாதாந்தம் அதிகளவு 500 லீட்டர் டீசல் வழங்கவதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனினும், 2013 ஜனவரி தொடக்கம் மே மாதம் வரை 5 மாத காலத்தின்போது அங்கீகரித்த எரிபொருள் வரம்பிற்கு அதிகமாக ரூபா 181,375 பெறுமதியுடைய 1496.5 லீட்டர் எரிபொருள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) நகர சபை எல்லைக்குள் வீதிப் பராமரிப்பிற்காக மட்டப்படுத்தும் உருளையை வழங்குவதற்கு 2012 ஆம் ஆண்டின்போது 2 சந்தர்ப்பங்களில் ரூபா 77,500 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மட்டுப்படுத்தும் உருளை எவ் வேலைக்குப் பயன்படுத்தப்பட்டது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட முடியாதிருந்தது.

## 2.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) 1998 முதல் 2011 வரை அங்கீகரிக்கப்பட்ட 1243 நிர்மாண வேலைகளில் 65 நிர்மாண வேலைகளுக்கு மாத்திரம் உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் பெறப்பட்டிருந்தன. இதன் காரணமாக, நிர்மாண வேலை மேற்பார்வை மிகக் குறைவான நிலையில் இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மூன்று வங்கிக் கணக்குகளுடன் தொடர்புடைய ரூபா 727,727 கூட்டுத்தொகையுடைய கொடுப்பனவுகள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்படாதிருக்கும் 20 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) வாடி வீட்டு கடன்பட்டோர் பேரேட்டின் பிரகாரம் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன்பட்டோர் மீதி ரூபா 669,230 ஆகும்.

(ஈ) பஸ் தரிப்புடன் வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதியையும் நிர்மாணிப்பதற்கு சொத்துக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்ற ரூபா 111,209,828 கடனில் 2008 பெப்ரவரி 11 அன்று ரூபா 20,000,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2013 ஜுன் 30 அன்று கடன் தவனை நிலுவை 39,057,510 ஆகும். வட்டி நிலுவை ரூபா 38,651,804 ஆகும்.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

--------------------------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(ஆ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கட்டுப்பாடு
(ஈ) வருவாய் நிர்வாகம்
(உ) சொத்து முகாமைத்துவம்